பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 03 சனிக்கிழமை 15.02.2025 கதிர் 099

## இனி இது ரகசியம் அல்ல!

யாழ். பல்கலைக்கழகத்தில் கலைப்பீடாதிபதி ரகுராம் பதவி விலகி ஏற்படுத்திய குழப்பநிலை இப்போது உயர் நீதிமன்றம் வரைக்கும் சென்றுள்ளது. ☞ 2

### 5 ஆண்டுகளுக்கு

# ஆளும்தரப்பின் செயற்பாட்டை வேடிக்கை பார்க்கப்போகிறோம்

### ரணில் மைத்திரி கூட்டு தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்கு மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர். ஆ-ளும்தரப்பும் மக்களுக்குப் பெரும் வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்றது. அதனால் நாம் ஆளும்தரப்புக்கு எவ்வித இடையூறுகளையும் ஏற்படுத்தப் போவதில்லை. 5ஆண்டுகள்ஆளும்தரப்பின் செயற்பாட்டை வேடிக்கை பார்க்கப் போகின்றோம்என்றுதெரிவித்தார்முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா.

முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேனதலைமையிலானஅரசியல்கட்சிகள் ஒன்றிணைந்து அரசியலில் ஈடுபடுவது தொடர்பாக நடத்திய கலந்துரையாடலின் பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பான கலந்துரையாடல் ஏற்கனவே ஜனவரி 30 ரணில் தலைமையில் இடம்பெற்றது. அதன் தொடர்ச்சியாக இரண்டாவது பேச்சு நேற்று இடம்பெற்றது.

கொழும்பிலுள்ள அமாரி ஹோட்டலில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் முன்னாள்அமைச்சர்களானநிமல்சிறிபாலடி சில்வா, மஹிந்த அமரவீர, முன்னாள் ☞ 2

## கைகலப்பில் காயமடைந்த முறிப்பு வாசி நேற்றுச் சாவு

கைகலப்பில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

முல்லைத்தீவு, முள்ளியவளைமுறிப்புபகுதியில் வியாழக் கிழமை இடம்பெற்ற சண்டையில் இவர் காயமடைந்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அதே பகுதியைச் சேர்ந்த 36 வயதான மோகன் கோகுலன் என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவருக்கும்மற்றொருகுழுவினருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் பின்னர் கைகலப்பாக மாறியுள்ளது. உயிரிழந்தவர் இரும்பு கம்பியால் தாக்கப்பட்டதில் படுகாயமடைந்தார். அவர் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். ☞ 2

## பெப்ரவரி 17 ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட உரை

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட உரை பெப்ரவரி 17 மு.ப 10.30 மணிக்கு நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான விவாதம் (வரவு செலவுத்திட்ட விவாதம்) 2025 பெப்ரவரி 18 முதல் மார்ச் 21 வரை இடம்பெறவுள்ளது.

2025 ஜனவரி 9 முதலாவது மதிப்பீட்டுக்காகப் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீடு பெப்ரவரி ☞ 2

## யாழ். இரவுத் தபால் தொடருந்து இனிமேல் மொறட்டுவயிலிருந்து

கொழும்பு - யாழ்ப்பாணத்திற்கு இடையிலான இரவு அஞ்சல் தொடருந்து சேவை நேற்று முதல் மொறட்டுவ தொடருந்து நிலையத்திலிருந்து தனது சேவையைத் தொடங்கியுள்ளது.

காங்கேசன்துறை வரைய செல்லும் இந்தத் தொடருந்து சேவையை ☞ 2

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டமூலம் இலங்கை அரசமைப்புக்கு முரணானது

### நிறைவேற்ற மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியம்

உள்ளூராட்சிமன்றத்தேர்தல்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் சில பிரிவுகள் இலங்கை அரசமைப்புக்கு முரணானவை என்பதால் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைஆதரவுடன்மட்டுமே அதனைநிறைவேற்றமுடியும்என்று உயர்நீதிமன்றம்தீர்ப்பளித்துள்ளது.

இந்தச்சட்டமூலத்திற்கு எதிராகத் தாக்கல்செய்யப்பட்ட வழக்குகளின் தீர்ப்பைசபாநாயகர்ஜகத்விக்ரமரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். சட்டமூலத்தை அதன் தற்போதைய வடிவத்தில், ஒற்றைப்பெரும்பான்மைஆதரவுடன் நிறைவேற்ற முடியாது என்பதை உறுதிப்படுத்தினார்.

உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் முன்பாக இந்த வழக்குகள் ஆராயப்பட்ட நிலையில் அவர்களில் ஒருவர் இந்தச் சட்ட வரைவை இப்போதிருக்கும் ☞ 2

## யு.எஸ்.எய்ட் விடயத்தை ஆராய நாடாளுமன்றத் தெரிவுக் குழு

'அமெரிக்க உதவி' அமைப்பான யு.எஸ்.எய்ட் இலங்கையில் எத்தகைய திட்டங்களுக்கு யாருக்கெல்லாம் நிதி உதவி வழங்கியதுஎன்பதுகுறித்துஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை அமைக்கத்தீர்மானித்துள்ளதாகசபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்றத்தின் விசேட அமர்பில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, அமெரிக்காவின் யு.எஸ்.எய்ட் நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இலங்கையின் பெயரை குறிப்பிட்டு சர்வதேச மட்டத்தில் பலவிடயங்கள்பேசப்படுகின்றன. இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்குவிசேடதெரிவுக்குழு ஒன்றை அமைக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ☞ 7

## இனி மின்வெட்டு இல்லை


நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் ஒரு அலகு தேசிய மின் கட்டமைப்புடன் மீண்டும் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து, நேற்று முதல் தினசரி மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படாது என்று மின்சக்தி அமைச்சர் அறிவித்தார்.

பாணந்துறை மின் இணைப்பு துணை மின் நிலையத்தில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தால், பெப்ரவரி 9 இலங்கை முழுவதும் மின்வெட்டை எதிர்கொண்டது.

இதனால்ஏற்பட்டமின்விநியோகச் சமச்சீரின்மை காரணமாக நுரைச்சோலையின் மூன்று மின் உற்பத்தி நிலையங்கள் தாமாகவே, பாதுகாப்புக் காரணங்களுக்காக இயக்கத்தை நிறுத்திக்கொண்டன. இதனால் நாட்டில் மாலை மற்றும் இரவு நேரத்தில் தொடர்ந்து ☞ 7

## சட்டமா அதிபர் திணைக்களம் தவறிழைத்திருக்கிறது – ஹக்கீம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டமூல விடயத்தில், சட்டமா அதிபர் திணைக்களம் தவறிழைத்துள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.



நாடாளுமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை விசேட அமர்வாகக் கூடியது. பிரதான நடவடிக்கையாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பான வழக்கின் தீர்ப்புக் குறித்த சபாநாயகரின் அறிவிப்பு இடம்பெற்றது.

தீர்ப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து பார்த்து செயற்பட்டிருந்தால், இந்த வழக்கை ஒரு நாளில் முடித்திருக்கலாம் என்றார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 2

## இந்த ஞாயிறும் மின்வெடு வருமா? நாடாளுமன்றத்தில் சஜித் கேள்வி

நாளை ஞாயிற்றுக் கிழமையும் நாடு முழுவதும் திடீர் மின் தடை ஏற்படுமா என்பது தொடர்பில் மின்சக்தி அமைச்சர் மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.



சூரிய சக்தி மின் உற்பத்தி மூலம் கிடைக்கும் மின்சாரத்தின் அளவு ஞாயிற்றுக் கிழமைகளில் தேவைக்கும் அதிகமாக இருக்கும் நிலையில் கடந்த ஞாயிறு போன்றே இந்த ஞாயிறும் மின் தடை ஏற்படும் அபாயம் உண்டு என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப்பி அவர் இதனைத் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

மாணவர்களுக்கு எதிரான 'ஈகோ' காரணமாக ஊதிப் பெருப்பிக்கப்படும் இந்த விவகாரம் இப்படிச் சட்ட நடவடிக்கையை நோக்கிச் செல்லும் என்பதையும் மாணவர்கள் அத்தகைய மனோநிலையில் இருக்கின்றனர் என்பதையும் ஏற்கனவே இந்தப் பத்தியில் ஒரு தடவை சுட்டிக்காட்டியிருந்தேன்.

அதேபோல இப்போது கொ-ழும்பு உயர் நீதிமன்றத்தில் சட்டத்துறை மாணவன் ஒருவரால்வழக்குத்தாக்கல்செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் மீதான சாதாரண ஒழுக்காற்று நடவடிக்கை ஒன்றை, போதைப் பொருள் பயன்பாட்டுப்பிரச்சினையாகஊதிப்பெருப்பித்து அதன் மூலம் பயனடைந்ததன் விளைவே இப்போது மாட்டிக்கொண்டு முழிப்பதற்கான காரணம்.

மாணவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கையில் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாது அவர்களுக்கு எச்சரிக்கையுடன் விடுவிப்பு வழங்குவது என்ற முடிவை பல்கலைக்கழகப் பேரவை முதலில் எடுப்பதற்கு நிர்வாகப் பக்கத்தில் உள்ள இருந்த பலவீனமே காரணம். அந்தப் பலவீனத்தைச் சுட்டிக்காட்டி இப்படி ஒரு முடிவை எடுத்தால் மாணவர்கள் நீதிமன்றத்தை நாடினால் அது பின்னர் பிரச்சினையாகும் என்பதையும் கூறியே பேரவை மாணவர்களுக்குத் தண்டனை விலக்களிக்கத் தீர்மானித்திருந்தது.

அதனை எதிர்த்து கலைப்பீடாதிபதி தனது பதவியை விட்டு விலகியதும், அவருக்கு ஆதரவாக என்கிற போர்வையில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் துணைவேந்தருக்கு வேலை நிறுத்தம் மூலம் அச்சுறுத்தல் விடுத்ததும், மீண்டும் பேரவையைக் கூட்டி ஒழுக்காற்றுச் சபையின் முடிவை மீளப்பெற்றார்கள். அதிலும் இரு மாணவர்களுக்கு எதிரான முடிவுகள் மீளப்பெறப்பட்டபோதிலும்ஒருமாணவனுக்கு எதிரானமுடிவுஅமுல்படுத்தப்படாமல்பாரபட்சம் காட்டப்பட்டது என்று கூறப்படுகின்றது.

இப்போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பது இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மாணவர்களால் அல்ல. அவர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டார் என்ற காரணத்தால், தனக்கெதிராக சமூக ஊடகங்களில் பரப்புரை செய்கிறார் என்று கலைப்பீடாதிபதி கோபப்பட்டு அவர் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியதன் அடிப்படையில் சட்டத்துறை மாணவனான சிறிகஜன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிராகவே மனித உரிமை மீறல வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இன்னும் சில மாதங்களில் தனது பல்கலைக்கழகக் கல்வியை முடித்துக்கொள்ளவுள்ள நிலையில் அவருக்கு பல்கலைக்கழகத்திற்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் அவரது இறுதிப் பரீட்சை உட்பட கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதால் அவர் நீதிமன்றத்தை நாடியிருப்பது நியாயமானதே. 'ஈகோ' காரணமாக இந்த மாணவன் பழிவாங்கப்பட்டிருக்கின்றார் என்பதே பல்கலைக்கழகத்திற்குள்பலரதும்கருத்து. இந்த விடயத்தில் பலக்கலைக்கழக நிர்வாகத்தின் பக்கம் பெரும் பலவீனம் காணப்படுகின்றது என்பதும் சட்டவல்லுநர்களின் கருத்து.

பாதிக்கப்பட்ட மாணவன் சார்பாக உயர் நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்திருப்பவர் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறையின்முன்னாள்விரிவுரையாளரான குருபரன். சட்டக் கல்வியைப் போதிக்கும் ஆசிரியர் ஒருவர் சட்டத்தின் பயன்பாடு குறித்த நடைமுறை அறிவை, அனுபவ அறிவைக் கொண்டிருப்பதும் கட்டாயம் என்ற கொள்கையின்அடிப்படையில்நீதிமன்றங்களில் அவர் சட்டத்தரணியாகச் செயற்பட்டு வழக்காடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழகம்தீர்மானம்நிறைவேற்றியது. கொழும்பு ஆளும்தரப்பு, படைத்துறைப் புலனாய்வுத்துறை ஆகியவற்றின் அழுத்தம் காரணமாகவே அவருக்கு எதிரான தீர்மானம் எடுக்கப்பட்டதாக அப்போது பரபரப்பான கதைகள் உலாவின. இதையடுத்து அவர் தனது பதவியிலிருந்து விலகினார். ஆனால், அப்போது அவரது பதவி விலகலுக்காக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஒரு துரும்பைக்கூடத்தூக்கிப்போட்டிருக்கவில்லை.

இப்போதுகலைப்பீடாதிபதிபதவிவிலகியதும் அவருக்காகவேலைநிறுத்தம்செய்தஆசிரியர் சங்கம் அன்று குருபரன் பதவி விலகிய சமயம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அதுமட்டுமல்லாமல் இதே துணைவேந்தர் சிறீ சற்குணராசா பதவியில் இருந்தபோதே குருபரன் பதவி விலகிச் செல்லும் நிலை ஏற்பட்டது. வினை விதைத்தால் வினை அறுத்தே ஆகவேண்டும் என்பதானே விதி.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடிவத்தில் ஒற்றைப் பெரும்பான்மை அடிப்படையில் நிறைவேற்ற முடியும் என்று தீர்ப்பளித்திருக்கின்றார் என்பதையும் சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்,

இதேவேளை, உள்ளூர் அதிகாரசபைகளுக்கான தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்திற்கு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுசார் ஆலோசனைக் குழு அனுமதியளித்துள்ளது.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் (பேராசிரியர்) அபயரத்ன தலைமையில் நேற்று நாடாளுமன்றத்தில் அமைச்சுசார் ஆலோசனைக் குழு கூடியது.

உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்)சட்டமூலம்குறித்துஉயர்நீதிமன்றம் முன்வைத்துள்ள தீர்மானத்தை பரிசீலனை செய்து, எதிர்க்கட்சிகளின் ஆலோசனைகளையும் கருத்திற் கொண்டு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையத்தின் 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையும் இங்கு ஆராயப்பட்டு,அங்கீகரிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில்பிரதியமைச்சர்ருவன்செனரத் உள்ளிட்ட பிரதியமைச்சர்கள்,எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் குழுவின் உறுப்பினர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இதனடிப்படையில் நாடாளுமன்றத்தில் மூன்றில்இரண்டுபெரும்பான்மைஆதரவுடன் இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படவுள்ளது. ஆளும்தரப்புக்குபோதியஉறுப்பினர்கள்பலம் இருப்பதால் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் அது இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும்.

## கைகலப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இவரது உயிரிழப்புக் குறித்து உடனடியாக யாரும் கைது செய்யப்படவில்லை என்று முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

## இந்த ஞாயிறும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின்வெட்டு தொடர்பில் ஆளும்தரப்பு சபைக்கு அறிவிக்க வேண்டும். இங்கு வரும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டைவிட்டு போகின்றனர். மின்சார தடை ஏற்படுகிறது. மின்வெட்டுக்கு தீர்வு என்ன? இந்த ஞாயிற்றுக்கிழமையும் மின்வெட்டு ஏற்படுவதற்கான அபாயம் உள்ளது. அதனால் அமைச்சர் இது தொடர்பில் நாட்டுக்கு அறிவிக்க வேண்டும்.

சூரியசக்தி மின் உற்பத்திக்கமைய அதன் பயன்பாட்டுக்கான கேள்வியிருக்காவிட்டால் மீண்டும் மின் தடை ஏற்படுவதற்கான அபாயம் உள்ளது. இதற்கு நீங்கள் வழங்கும் தீர்வு என்ன? மின்வெட்டுக்கான காரணங்களையும் நீங்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பில் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஞாயிற்றுக்கிழமை நீங்கள் புதிதாக தொழிற்சாலைகளை உருவாக்கி கேள்வியையும்பாவனையையும்சமன்செய்ய ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா? ஏதேனும் உறுதியற்ற நிலைமை ஏற்படாத வகையில் முன்னெடுத்துள்ள நடவடிக்கை என்ன? அவ்வாறு இன்றி குரங்காலும் மந்தியாலும் இந்த பிரச்சினை ஏற்பட்டது என்பது பதில் இல்லை. சம்பந்தப்பட்ட அமைச்சர் இங்குள்ளார். அவர் பதிலை வழங்க வேண்டும்.

மேலும் தற்போது ஆளும்தரப்பினால் அரசியல் பழிவாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எமது நாட்டை விட்டு செல்கின்றனர். வெளிப்படைத் தன்மையுடனும் போட்டித்தன்மையுடனுமே இந்த நாட்டின் அனைத்து விடயங்களும் இடம்பெற வேண்டும் என்றே நாங்கள் தெரிவிக்கிறோம் என்றார்.

## சட்டமா அதிபர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி மன்றம் தொடர்பான சட்டமூலம் அரசமைப்பின் 12 (1) உறுப்புரைக்கு முரணாகியுள்ளதால், இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அனுமதிக்கவேண்டும் என உள்ளூராட்சி மன்ற வழக்கு தொடர்பான தீர்ப்பில், இரண்டு நீதியரசர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

சட்டமா அதிபர் திணைக்களம் இது தொடர்பல் ஆரம்பத்தில் இருந்து ஆராய்ந்து பார்த்து, அமைச்சரவைக்கு இதுதொடர்பில் உத்தரவாதம் ஒன்றை வழங்கி இருந்தால், ஒரு நாளில் இந்த வழக்கைப் பேசி முடித்திருக்கலாம். இது சட்டமா அதிபர் திணைக்களத்தின் தவறாகும்.

உள்ளூராட்சிமன்றதேர்தல்சட்டமூலத்தில் இவ்வாறானதொரு விடயம் இருப்பதை நாங்கள்சுட்டிக்காட்டும்வரை, இந்தசட்டமூலம் அரசமைப்புக்கு முரண் என்பது சட்டமா அதிபர் திணைக்களத்துக்குத்தெரியாதா? உள்ளூராட்சி மன்ற சட்டமூலம் அரசமைப்புக்கு முரண் என்பதைதெளிவாகதெரிந்துகொண்டேசட்டமா அதிபர் திணைக்களம் செயற்பட்டிருக்கிறது -என்றார்.

## ஆளும்தரப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன, நிமல் லன்சா, பிரேம் நாத் சி தொலவத்த, உதய கம்மன்பில மற்றும் ஐ.தே.க. தவிசாளர் வஜிர அபேவர்தன ஆகியோர் உள்ளிட்ட அரசியல்வாதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

''இது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட கலந்துரையாடலின் தொடர்ச்சியாகும். ஆளும்தரப்பில் அங்கத்துவம் வகிக்காத ஏனைய சகல அரசியல் கட்சிகளுடனும் இணைந்துசமகாலமற்றும்எதிர்காலஅரசியல் நிலைவரம்குறித்துமதிப்பாய்வுசெய்கின்றோம். அரசாங்கத்தின் அடக்குமுறைகள், அரசியல் பழிவாங்கல்கள் உள்ளிட்ட பல்வேறு காரணிகள் குறித்து இதன் போது அவதானம் செலுத்தப்படுகிறது. இணைந்துசெயற்படுவதற்கு அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம்" என்றார் ராஜித சேனாரத்ன.

உதய கம்மன்பில தெரிவிக்கையில், கலந்துரையாடல்கள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அவை எதிர்க்கட்சிகளின் இரகசியமாகும். ஆளும்தரப்பின் செயற்பாடுகள் குறித்த கருத்துப் பரிமாற்றமும் இடம்பெறுகிறது. வேலை செய்ய முடியாத ஆளும்தரப்பிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதால் நாடு எதிர்நோக்கிய அபாயம் தொடர்பிலேயே பிரதானமாக அவதானம் செலுத்துகின்றோம் - என்றார்.

''ஆளும்தரப்புக்கு எதிராக ஏதேனும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்போது கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. இந்த ஆளும்தரப்பிலிருப்பவர்கள்ஆரம்பத்தில்ஆயுதங்களைஏந்தி பின்னர்ஜனநாயகத்தைபின்பற்றியவர்களாவர். பல்கலைக்கழகங்களில்கூட இவர்களது அரசியல் செயற்பாடுகள் இவ்வாறுதான் காணப்படுகின்றன. எனவே இவர்களிடமிருந்து ஜனநாயகத்தைப் பாதுகாப்பதே எமது நோக்கமாகும். ஏனைய கட்சிகள் ஜனநாயக ரீதியாக ஆட்சியைப் பெறுவதற்கே முற்படுகின்றன. ஆனால் இந்த ஆளும்தரப்பு 'நாம் மீளக் கையளிப்பதற்காக அதிகாரத்தைப் பெறவில்லை' என்று கூறுகின்றது. அவ்வாறெனில் பலவந்தமாக அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள இவர்கள் முற்படுகின்றனரா என்ற சந்தேகம் எழுகிறது" என்றார் பிரேம்நாத் சி தொலவத்த.

## பெப்ரவரி 17...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

18 திகதி முதல் 25 திகதி வரை ஏழு நாட்கள் இடம்பெறவுள்ளது. அத்துடன் பெப்ரவரி 25 மாலை 6 மணிக்கு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் குறித்த குழுநிலை விவாதம் பெப்ரவரி 27 முதல் மார்ச் 21 வரை 4 சனிக்கிழமைகள் உள்ளடங்கலாக 19 நாட்கள் இடம்பெறவுள்ளது. இதற்கான வாக்கெடுப்பு மார்ச் 21 மாலை 6 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

வரபூசெலவுத்திட்டவிவாதக்காலப்பகுதியில் மு.ப 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரையான நேரம் 5 வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. மு.ப 10 மணி முதல் பி.ப. 6 மணி வரையான காலப் பகுதியில் வரவுசெலவுத்திட்ட விவாதம் இடம்பெறும்.

## யாழ். இரவுத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளவத்தையிலிருந்து தொடங்கும்படி கோரிக்கைவிடுக்கப்பட்டுவந்தநிலையில், அது மொறட்டுவயிலிருந்து தொடங்கப்படுவதாக தொடருந்து திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி 7ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியாவில் மக்கள் செறிந்து வாழுமிடங்களில் குப்பைகளை அகற்றல் விழிப்புணர்வு நிகழ்வு

வவுனியாவில் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் குப்பைகளை அகற்றும் செயன்முறை, மாற்று முறையில் பிணக்குத் தீர்த்தல் பொறிமுறைகளை வலுப்படுத்தல் எனும் திட்டத்தினூடாக உருவாக்கப்பட்ட மாற்று முறையில் பிணக்குத் தீர்ப்பதற்கான மன்றத்தினூடாக வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

மாற்று முறையில் பிணக்குத் தீர்த்தல் பொறிமுறைகளை வலுப்படுத்தல் எனும் திட்டத்தினூடாக உருவாக்கப்பட்ட மாற்று முறையில் பிணக்குத்தீர்ப்பதற்கான மன்றத்தினூடாக வவுனியா மாவட்டத்தின் சின்னப்புதுக்குளம், பிரதேசத்தில் குப்பைகளை முறையற்ற விதத்தில் மக்கள் செறிந்து வாழும் இடங்களில் போடுவதனால் ஏற்படும் முரண்பாடுகளைக் குறைக்கும் வகையில் கடந்த வாரம் ஒரு விழிப்புணர்விற்கான பலகை ஒன்று






நிறுவப்பட்டது.

சேர்ச் போ கொமன் கிறவுண்ட் அமைப்பினால் வவுனியாவிலுள்ள பேர்ம் நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தின் கீழ் சின்னப்புதுக்குளம் பகுதியில் ஏடிஆர் மன்ற உறுப்பினர்கள் சில சமூக மட்ட அமைப்புக்களைச் சேர்ந்த உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் அந்த பிரதேசத்தில் சிரமதான நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது வீதியோரம், வீடுகளை அண்மித்த பகுதிகள் என்பவற்றில் காணப்பட்ட குப்பைகள், கழிவுகள் அகற்றப்பட்டதுடன், அப்பகுதி தூய்மையான பகுதியாக மாற்றியமைக்கப்பட்டது. இதில் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் இணைந்து கொண்டனர். 100

# மாணவர்கள் மத்தியஸ்தம் வழிகாட்டல் செயலமர்வு

(இம்றான்)

கிண்ணியா அல் - அதான் மகா வித்தியாலத்தில் அதிபர் எம்.எஸ் அஸீஸ் தலைமையில் மாணவர்களுக்கான 'மாணவர் மத்தியஸ்தம்' வழிகாட்டல் செயலமர்வு மூன்று நாள்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வியாழக்கிழமையுடன் முடிவுற்றது.

நீதி அமைச்சின் திருகோணமலை மத்தியஸ்தம் இணைப்பாளர் திருமதி. என். எல்.நஸ்ரின் பாடசாலை மத்தியஸ்தம் இணைப்பாளர் எஸ்.எம். றிஸாத் கான் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர்.

பீ.பவானி, எப். றில்வான் பாத்திமா, எம்.ஆர்.றகீமா பானு வளவாளர்களாககலந்துகொண்டு மாணவர்களுக்கு இடையில் ஏற்படும் பிணக்குகளையும், பிணக்குகளை எவ்வாறு கையாண்டு தீர்ப்பது பற்றித் தெளிவூட்டப்பட்டன.





# 3 பொலிஸ் அதிகாரிகளுக்கு வவுனியாவில் இடமாற்றம்

வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸ்பொறுப்பதிகாரி அழகியவண்ண உள்ளிட்ட மூன்று பொலிஸ் அதிகாரிகளுக்கு வவுனியாவில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் தற்போது நாடு பூராகவும் பல பொலிஸ் அதிகாரிகள் பலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக வவுனியா மாவட்டத்தில் கடந்த காலத்தில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய நிர்வாக பிரிவு பொறுப்பதிகாரி, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி, புளியங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பல பதவி நிலைகளை வகித்து, தற்போது வவுனியா மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செற்படும் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரியாகவும் செயற்பட்ட அழகியவண்ணவுக்கு வெள்ளிக்கிழமை முதல் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், தமன பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

அத்துடன், நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.எம்.பி.ஆர்.கே.திவுல்வெள அனுராதபுரம்பொலிஸ்நிலையத்திற்கும், உளுக்குளம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி கல்கிசை பொலிஸ் நிலையத்திற்கும் இடமாற்றப்பட்டுள்ளனர். 100

# பாடசாலை மத்தியஸ்தம் தொடர்பில் மருதமுனையில் பயிற்சி அமர்வு

(பாறுக் ஷிஹான்)

பாடசாலை மத்தியஸ்தம் தொடர்பில் மாணவர்களுக்கு தெளிவூட்டும் செயலமர்வு நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் மத்தியஸ்த ஆணைக்குழு பங்களிப்புடன் மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரி வியாழக்கிழமை நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் ஐ.உபைதுல்லா வருகை தந்து வரவேற்புரையுடன் இச்செயலமர்வை ஆரம்பித்து வைத்தார். அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட இப்பாடசாலையில் இருந்து சுமார் 75 க்கும் அதிகமான மாணவ மாணவிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது செயலமர்வில் மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் எஸ்.றிஸ்மினா வளவாளராக கலந்துகொண்டு மாணவர்களுக்கு பல்வேறு பாடசாலை மத்தியஸ்தம் மத்தியஸ்த



வரலாறு முரண்பாடு தொடர்பில் பல்வேறு விளக்கங்களை வழங்கினார்.

மேலும் இச்செயலமர்வானது மத்தியஸ்த அபிவிருத்தி உத்தியோகத்த பாறுக் ஸிஹானின் பங்களிப்புடன் பிரதி அதிபர் எம்.சி நஸார், ஜே.எம்.எம்.நியாஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது பாடசாலை மத்தியஸ்தம் மத்தியஸ்த வரலாறு, முரண்பாடு தீர்வின்



முக்கியத்துவம், தொடர்பாடல் கலந்துரையாடல், மத்தியஸ்த படிமுறைகள் பாடசாலை மத்தியஸ்தத்தில் மாணவர்களின் பங்கு என்பன தெளிவூட்டப்பட்டன.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இன்னும் அதிகம் செய்யவேண்டும்

கடந்த நான்கு மாதங்களில் (அக்டோபர் 2024 முதல் ஜனவரி 2025 வரை) போதைப்பொருள் பயன்படுத்திய குற்றச்சாட்டில் காவல் துறையைச் சேர்ந்த பதினேழு பேர் பணிநீக்கம் செய்யப்பட்டனர் என்று காவல்துறை தெரிவித்துள்ளது. புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் சிறப்பு காவல் பிரிவுகள் மூலம் போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள் என்ற கண்டறியப்பட்ட காவல்துறையினரின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாக காவல்துறை ஊடகப் பேச்சாளர், புத்திக மனதுங்க தெரிவித்தார். அவர்கள் கண்காணிக்கப்படுகிறார்கள், விசாரிக்கப்படுகிறார்கள், தவறிழைத்தவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

'போதைப்பொருள் பயன்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்ட எந்தவொரு காவல்துறை அதிகாரிக்கும் மன்னிப்பு கேட்கவோ அல்லது இரண்டாவது வாய்ப்பு வழங்கப்படவோ கூடாது, ஏனெனில் இதுபோன்ற சில நபர்கள் முழு காவல் சேவையையும் அவதூறு செய்கிறார்கள்,' என்று மனதுங்க வலியுறுத்தினார். காவல்துறையினர் மத்தியிலும் மற்றும் பிற பொது அரச அலுவலர்கள் மத்தியிலும் போதைப்பொருள் பயன்பாடும் அதனால் ஏற்படும் முறைகேடுகளும் நீண்டகாலப பிரச்சினையாக இருந்து வருகிறது, இது சட்ட அமலாக்கல் துறையையும் பொது சேவைத் துறையையும் ஊழல் மற்றும் மோசடிக்கு ஆளாக்கக்கூடிய கையறு நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. இந்த விஷயத்தை நிவர்த்தி செய்ய காவல் துறை எடுத்த நடவடிக்கை வரவேற்கத்தக்க மாற்றமாகும்.

ஆயினும்கூட, குற்றவாளிகள் அவர்களின் பதவிகளில் இருந்து வெளியேற்றப்படுவது மட்டுமே அவர்களுக்கான தண்டனையா? இந்த விடயத்தில் காவல்துறை பொறுப்புடன் செயல்படுகிறதா? இத்தகைய குற்றத்தில் ஈடுபட்ட பொதுமக்களை காவல்துறையினர் இப்படித்தான் நடத்துகிறார்களா? ஒருவர் போதைப் பொருள் பயன்படுத்துபவராகக் கண்டறிந்தால் அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தி சிறைத் தண்டனையோ அல்லது மறுவாழ்வு நிலையச் சிகிச்சையையோ வாங்கிக்கொடுக்கும் காவல்துறையினர் தமது பக்கமுள்ளவர்களை மட்டும் பதவி நீக்கத்தோடு விடுவிப்பது எந்த வகையில் நியாயம்?

நடத்தை மீறல் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்ட காவல்துறையினர் மறுவாழ்வுக்கு உட்படுத்தப்படாமல் சமூகத்தில் அநாதரவாக விடப்படுவது சமூகத்திற்கு ஆபத்தில்லையா? இதுபோன்ற நடவடிக்கைகள் விளைவுகளை சிக்கலாக்குகின்றனவா? காவல் துறை மிகவும் பொறுப்புடன் செயல்பட வேண்டாமா? புரட்சிகரமான மாற்றத்திற்கான ஆணையுடன், ஒரு அமைப்பு மாற்றத்தை உறுதியளித்த தற்போதைய அரசாங்கம், குறிப்பிடத்தக்க சீர்திருத்தங்களைச் செய்யும் தனித்துவமான நிலையில் உள்ளது, அவை சரியாகச் செய்யப்பட்டால், இலங்கையின் சட்ட அமலாக்கம் மற்றும் நிர்வாகத்தின் பாதையை மாற்றும். போதைப்பொருள் தாக்கத்தின் சமூகப் பிரச்சினையை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பது குறித்த தேசியக் கொள்கைக்கான நேரம் இது.

காவல்துறையிலிருந்து போதைப் பொருட் பாவனையை மட்டுமல்ல மதுபோதையையும் துடைத்தெறியவேண்டும். அதுவும் லஞ்சம் ஊழலுக்கான வழிவகையை ஏற்படுத்தும் காரணியாக இருக்கின்றது. ஒரு வழக்கை முறையாக விசாரித்து முடிப்பதற்கும் குற்றவாளிக்குத் தண்டனை வாங்கிக்கொடுப்பதற்கும் மதுப் போத்தல்களை அன்பளிப்பாக லஞ்சம் கேட்கும் காவல்துறையினரும் அதிகாரிகளும் பெருகிக் கிடக்கிறார்கள். இதனாலேயே குற்றவாளிகளுக்கும் காவல்துறையினருக்கும் நெருக்கமும் அதிகமாகிறது. ஒரு போத்தல் மதுபானத்துடன் காவல்துறையில் காரியங்களைச் சாதித்துக்கொள்ளலாம் என்பது பொதுக் கருத்தாக இருக்கின்றது. இந்த நிலையும் மாறவேண்டும். காவல்துறை போன்ற அரச பணிகளில் இருப்பவர்களின் மதுப் பயன்பாடு தொடர்பில் குறைந்தபட்சம் இறுக்கமான கட்டுப்பாடுகளைக் கொண்டுவருவதற்கான கொள்கைகளையும் ஆளும்தரப்பு அறிமுகப்படுத்தவேண்டிய தருணம்.

காவல் துறையிலிருந்து ஒரு சில அதிகாரிகளை பணி நீக்கம் செய்வதைவிட இந்தப் பிரச்சினைக்கு கூடுதல் தீர்வுகள் தேவை. துறையின் நேர்மை மற்றும் செயல்திறனை உறுதி செய்யும் வகையில் சீர்திருத்தங்கள் மற்றும் கட்டமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும்.

# இஜ்திமா வெள்ளிக்கிழமை

(சியாஜ்)

ரமழானை வரவேற்போம்' என்ற கருப்பொருளில் புத்தளம் பெரிய பள்ளிவாசல் நடாத்தும் மாபெரும் இஜ்திமா வெள்ளிக்கிழமை பிற்பகல் 06.30 முதல் 10.00 வரை நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு பேச்சாளர்களாக ஓய்வு பெற்ற அதிபரும் அப்ரார் பவுண்டேஷனின் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அஷ்ஷெய்க் எம்.ஜே.எம்.மன்சூர், ஏ.ஆர்.எம். பாக்கியத்துஸ் ஸாலிஹாத் கலாபீடத்தின் விரிவுரையளார் மிஸ்பாஹ் (உஸ்வி), உண்மை உதயம் ஆசிரியர் மற்றும் பரகஹதெனியா அஸ்ஸலபிய்யா கலாபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.எச்.எம். இஸ்மாயில் (ஸலபி) ஆகியோர்

# சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நிர்வாக கட்டடத் திறப்பு விழா!

(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நிர்வாகக் கட்டடத் திறப்பு விழா நேற்று (வெள்ளிக்கிழமை) சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி டி.கருணாகரன் தலைமையில் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது.







இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. ட்ரொட்ஸ்கி கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

மேலும் இந்நிகழ்வுக்கு கௌரவ அதிதிகளாக நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் பொறியியலாளர் எஸ். ஏ. கே.சுபசிங்க, நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் பணிப்பாளர் (பொறியியல் பிரிவு)



பொறியியலாளர் பி.எஸ்.சி.கே முணசிங்க, சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா, நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் பிரதம பொறியியலாளர் டீ.சஞ்ஞு வன்

மற்றும் விசேட அதிதிகளாக கல்முனை மேல் நீதிமன்ற பதிவாளர் எஸ்.எச்.எஸ் ஹக்கீமுள்ளாஹ், கல்முனை மேல் நீதிமன்ற வலயக் கணக்காளர் ஏ.எல் நஜிமுடீன் மேல் நீதிமன்ற தொழிநுட்ப உத்தியோகத்தர் எம்.எஸ்.எம் றிப்கான் மற்றும் சட்டத்தரணிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# பாதுகாப்பான வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான நடமாடும் சேவை நிந்தவூரில்

(பாறுக் ஷிஹான்)

நிந்தவூர் பிரதேச செயலகத்துடன் இணைந்து மனித அபிவிருத்தி தாபனம் பாதுகாப்பான புலம்பெயர் தொழில் (வெளிநாட்டு வேலை) தொடர்பான நடமாடும் சேவை பிரதேச செயலகத்தில் வியாழக்கிழமை நடத்தியது.

நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ. எம். அப்துல் லத்தீப் தலைமையில் நடைபெற்ற இந்நடமாடும் சேவையில் நிந்தவூர் உதவி பிரதேச செயலாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி. அப்துல் அஸீஸ், கல்முனை சட்ட உதவி ஆணைக்குழு சட்ட உத்தியோகத்தர் வீ.ரீ.ஹசீனா, மனித அபிவிருத்தி தாபன உதவி இணைப்பாளர் எம்.ஐ.றியால் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அம்பாறை மாவட்ட காரியாலய அதிகாரிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பல அரச



அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதன் போது நடமாடும் சேவைக்கு வருகைதந்த பொதுமக்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர் தொழில் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகளும், ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# சேவைநலன் பாராட்டு!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) யில் ஆசிரியர்களாக கடமையாற்றி இலங்கை அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா நேற்று ஆசிரியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் கல்லூரி அதிபர் ஏ.பி. பாத்திமா நஸ்மியா சனூஸ் தலைமையில் சேர் ராசிக் பரீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மஹ்மூத் மகளிர் கல்லூரியின் மூன்று ஆசிரியர்களான எஸ்.எம். உவைஸ், றிஸ்லியா முகம்மது உவைஸ், ஏ.பீ. றோஷன் டிப்றாஸ் ஆகியோர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

ஆசிரியர்களாக இருந்து அதிபர் சேவையில் இணைந்திருக்கும் இவர்கள் எமது கல்லூரியின் கல்வி அபிவிருத்தி, பௌதீக வள முகாமைத்துவம், ஒழுக்கம், சமூக விஞ்ஞான மற்றும் போட்டி நிகழ்ச்சிகள் போன்றவற்றில் தங்களை முன் நிலைப்படுத்தி பல்வேறு அதிபர்களுடன் இணைந்து பணியாற்றி கல்லூரி

வளர்ச்சி அடைய செய்வதில் முக்கிய பாத்திரத்தை வகித்தவர்கள். இவ்வாறானவர்களின் ஆசிரியத்தின் சேவையை பாராட்டி கௌரவிப்பதில் பாடசாலை சமூகம் பெருமிதம் கொள்கிறது என இதன்போது வாழ்த்துரை நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான ஹாஜியானி எஸ்.எஸ்.எம். மசூது லெவ்வை, ஏ.எச். நதீரா, உதவி அதிபர்களான எம்.எஸ். மனூனா, என்.டி. நதீகா, பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் பிரதி மற்றும் உதவி அதிபர்கள், பதவி உயர்வு பெற்ற இந்த ஆசிரியர்கள் பற்றிய நினைவுகள் மற்றும் வரலாற்று நினைவலைகளை சபையினர் மத்தியில் பகிர்ந்து கொண்டனர்.



# 25 மாவட்டங்களிலும் கற்பக கிளைகள் திறக்கப்படும் பெருந்தோட்ட பிரதி அமைச்சர் பிரதீப் உறுதியளிப்பு

(சுபேசன்)




நாட்டினுடைய சகல மாவட்டங்களிலும் கற்பகத்தின் கிளைகள் திறக்கப்படும் என பெருந்தோட்ட பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் யாழில் உறுதியளித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் தொழிற்துறை திணைக்களம் மற்றும் பனை அபிவிருத்திச்சபை ஆகியன இணைந்து திறந்து வைத்த 'கற்பகம்' பனை சார் உள்ளூர் உற்பத்தி நிலைய திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதே தேசிய மக்கள் சக்தியின் எதிர்பார்ப்பாக இருந்தது. விசேடமாக பனை சார்ந்த உற்பத்திகளை விற்பனை செய்வதன் ஊடாக வடமாகாண மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும்.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக தெரிவாகியுள்ள சகாதேவன் வீரியத்துடன் செயலாற்றி வருகிறார். பனை சார்ந்த உற்பத்திகளை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். அமைச்சின் நேரடிக்கண்காணிப்பின் ஊடாக இதுவரை செயற்படுத்தப்படாத அபிவிருத்திகளை இயன்றவரை வடக்கு மாகாணத்தில் செயற்படுத்துவோம்.

பனை சார்ந்த உள்ளூர் உற்பத்திகளின் விற்பனை நிலையமான கற்பகத்தை சகல மாவட்டங்களிலும் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனூடாக வெளி மாவட்ட மக்களுக்கும் பனை சார்ந்த உற்பத்திப் பொருள்களை அறிமுகம் செய்ய முடியும். - என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.







# ‘கிளீன் சிறீலங்கா’ வேலைத் திட்டம் கல்முனை செயலகத்தில் கலந்தாய்வு

(பாறுக் ஷிஹான்)

அரசின் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடலொன்று கல்முனை பிரதேச செயலக பதில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ரி.எம்.எம். அன்சார் தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ. ஆர். எம். சாலிஹ் ,பொலிஸார் ,கடற்படை உயர் அதிகாரிகள் பள்ளிவாசல் நிர்வாகிகள், உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

கிளீன் சிறீ லங்கா வேலைத்திட்டம் தொடர்பாக விளக்கமளித்து அதனை கல்முனை பிராந்தியத்தில் வெற்றி கரமாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் கல்முனை பிரதேச செயலக பதில் பிரதேச செயலாளர் இங்கு விளக்கமளித்தார்.

இது தவிர, அன்றைய நாள் அம்பாறை மாவட்டத்தின் பாணமை தொடக்கம் பெரியநீலாவணை வரையான சுமார் 110 கிலோ மீற்றர் நீளமான கடற்கரையோரத்தை சுத்தம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், கரையோரத்தை சுத்தம் செய்வது தொடர்பான வேலைத்திட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 16 ஆம் திகதி மாவட்டத்தின் அனைத்து இடங்களிலும் ஒரே நேரத்தில் நடைமுறைப்படுத்தி அதன் பிரதான நிகழ்வை பொத்துவில் அறுகம்பையில் அரசாங்க அதிபரின் ’தலைமையில் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூரில் நடமாடும் சேவை

(நூருல் ஹுதா உமர்)

மனிதஅபிவிருத்திதாபனம், நிந்தவூர்பிரதேச செயலகத்துடன் இணைந்து பாதுகாப்பான புலம்பெயர் தொழில் (வெளிநாட்டு வேலை) தொடர்பான நடமாடும் சேவை நிந்தவூர் பிரதேச செயலகத்தில் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ. எம். அப்துல் லத்தீப் தலைமையில் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவைக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி. அப்துல் அஸீஸ், கல்முனை சட்ட உதவி ஆணைக்குழு சட்ட உத்தியோகத்தர் வீ.ரீ.ஹஸீனா, நிந்தவூர் உதவி பிரதேச செயலாளர், மனித அபிவிருத்தி தாபன உதவி இணைப்பாளர் எம். ஐ. றியால் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அம்பாறை மாவட்ட காரியாலய



அதிகாரிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பல அரசு அதிகாரிகளும் கலந்து கொண்டு நடமாடும் சேவைக்கு வருகை தந்த பொது மக்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர் தொழில் தொடர்பான பிரச்சனைகளுக்கான



தீர்வுகளும், ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் வழங்கியதுடன் முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டது.



## யாழ். இரவுத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 6.55 க்கு மொரட்டுவ தொடருந்து நிலையத்திலிருந்து புறப்படும் இரவு அஞ்சல் தொடருந்து கல்கிஸ்ஸ, தவில்வல, வெள்ளவத்தை தொடருந்து நிலையங்கள் ஊடாக கொழும்பு, கோட்டை தொடருந்து நிலையத்தை வந்தடையும். அங்கிருந்து இரவு 8 மணிக்கு யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்படும்.

## யு.எஸ்.எய்ட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாமல்ராஜபக்சஉங்களிடம்(சபாநாயகர்)கடிதம் மூலமாகக் கேட்டிருந்தார். இந்த விவகாரத்தில் பிரதமரின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. அது ஆளும்தரப்புக்கு நல்லதல்ல, ஆகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்படுமா, அதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை என்னவென்பதை சபைக்கு அறிவியுங்கள்" என்று வலியுறுத்தினார்.

சபைக்கு தலைமை தாங்கிய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன, அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளேன் என்று பதிலளித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச கடந்த வாரம் சபாநாயகரிடம் முன்வைத்த கோரிக்கையில் இந்த விவகாரம் குறித்து கவனம் செலுத்த நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை அமைக்கவேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

"கடந்தகாலங்களில்யு.எஸ்.எய்ட்என்றஅரச சார்பற்ற நிறுவனம் 7.9 மில்லியன் டொலரை செலவழித்துஊடகவியலாளர்களுக்குபல்வேறு பயிற்சி வழங்கியுள்ளதாகவும், ஆண் மற்றும் பெண் பாலினம் குறித்து விளக்க பணத்தைச் செலவிட்டுள்ளதாகவும் அமெரிக்க அரசின் உள்ளக மட்டத்தில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் அமெரிக்க ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ எக்ஸ் வலைத்தளத்தில் 'இலங்கை, பங்களாதேஸ், உக்ரைன், பாகிஸ்தான், இந்தியா உள்ளிட்ட 09 நாடுகளின் ஆளும்தரப்புக்களை மாற்றியமைப்பதற்காக யு.எஸ்.எய்ட் என்ற அரச சார்பற்ற நிறுவனம் 260மில்லியன்டொலரைசெலவுசெய்துள்ளது' என்று பதிவேற்றம் செய்துள்ளார்.

இதற்கு முன்னரும் இலங்கையில் சட்டத்தின் பிரகாரம் பதவிக்கு வந்த ஆட்சிகளை நெருக்கடிக்குள்ளாக்குவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் நாட்டின் இன நல்லிணக்கம், தேசியத்தை வீழ்த்தும் வகையில்செயற்பட்டதாகப்பலகுற்றச்சாட்டுகள் காணப்படுகின்றன.

இவ்வாறானபின்னணியில்இலங்கையில் பாலினம் தொடர்பில் ஊடகங்களுக்கு தெளிவுப்படுத்துவதற்கு இந்த நிறுவனம் 7.9 மில்லியன் டொலர்களை செலவு செய்துள்ளது என்பதுபிரச்சினைக்குரியதொருவிடயமாகும்.

இலங்கையில் மக்கள் கிளர்ச்சிப் போராட்ட காலத்தில் இந்த நிதி பயன்படுத்தப்பட்டதா என்பது குறித்து ஆராயவேண்டும். அத்துடன் இந்த நிதியை பெற்றுக்கொண்ட நபர் அல்லது நிறுவனங்கள் தொடர்பிலும், அந்த நிதி எதற்காகப் பயன்படுத்தப்பட்டது என்பது தொடர்பிலும் ஆராய்வது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு இன்றியமையாததாக அமையும்.

ஆகவே இவ்விடயம் குறித்து ஆராய்ந்து நாடாளுமன்றத்துக்குஅறிக்கைசமர்ப்பிப்பதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைக்குமாறுகோருகின்றேன்"என்றுநாமல் அந்தக் கோரிக்கையில் தெரிவித்திருந்தார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது.

நுரைச்சோலையில் செயற்படாது போன மூன்று மின் உற்பத்தி மையங்களில் ஒன்று மீண்டும் இயக்கத்தைத் தொடங்கியதால் இனிமேல் மின் வெட்டை அமுல்படுத்தவேண்டியதில்லை என்று அமைச்சர் தெரிவித்தார்.

# பெண்கள் கல்லூரியில் நெட் போல் ஆரம்பம்

(இம்றான்)

கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் தசாப்தத்தின் பின்பு ஆரம்பமான இல்ல விளையாட்டுப்போட்டியில் வியாழக்கிழமை நெட் போல் நடைபெற்றது.

இல்லங்களுக்கு இடையிலான போட்டியானது திருமதி எஸ்.நஸீரா நஜாத் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக ஏ.எஸ். அஸ்மி தொழிலதிபர் (பி. எச். டி.) மற்றும் பாடசாலை அபிவிருத்தி குழுச் செயலாளர் எஸ்.எம். நிஸாத் கான் உறுப்பினர் ஏ. எம்.எம். கலந்து சிறப்பித்தனர்.

போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற இல்லத்துக்கு கிரீடமும் மாணவிகளுக்கு பதக்கங்களும் வழங்கப்பட்டன.








# வடமேல் ஆளுநரின் மக்கள் சந்திப்பு

(சியாஜ்)

வடமேல் மாகாண ஆளுநர் திஸ்ஸ வர்ணசூறியவின் மக்கள் சந்திப்பு புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றுதலோடு புத்தளம் நகரில் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் நகர அணியினர் நாடாளுமன்ற உறுப்பினர் எம் ஜே எம் பைசலோடு ஒன்றிணைந்து சில முக்கியமான விடயங்களை ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வந்து தீர்வுகள் பெறப்பட்டுள்ளது.

மன்னார் வீதி, புத்தளம் பிரதேச சபை மற்றும் நகர சபை எல்லைக்குட்பட்ட வெள்ள நீர் வெளியேற்றும், கால்வாய்களுக்கு மேலால் உள்ள சட்ட விரோத கட்டுமானங்களை நீக்கக்கோரியதுடன் அதற்கான பணிப்புரைகளை இரண்டு செயலாளர்களுக்கும் ஆளுநர் வழங்கினார்.

பாத்திமா கல்லூரிக்கு அண்மையில் உள்ள நீர்ப்பாசன திணைக்களத்துக்கு சொந்தமான காணியை கல்லூரியின் விஸ்தரிப்புக்காக விடுவிக்க கோரி கல்லூரி அதிபரின் வேண்டுகோளை ஆளுநருக்கு முன்வைக்கப்பட்டது இதற்கான தீர்வினை மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தின் ஊடாக வழங்க ஆளுநர் அறிவுறுத்தினார்.

புத்தளம் விஞ்ஞான கல்லூரியின் அதிபர் கல்லூரிக்கு குறை நிரப்பப்பட வேண்டிய ஆசிரியர் நியமனங்களை வழங்குமாறும் விண்ணப்பித்ததற்கு அமைய உடனடியாக மாகாண கல்வி பணிப்பாளருக்கு விடயங்களை ஆளுநர் எடுத்துரைத்தார்.

சேதமடைந்த வீதிகளால் மழைக்காலத்தில் மக்கள் அவதியுறும் நிலைமைகளை ஆளுநருக்கு எடுத்துக்காட்டி அவசரமாக சீர் செய்யக்கூடிய தார் பாதைகளை இடைநடுவே கைவிடப்பட்டுள்ள பாதை நிர்மாணங்களையும் செய்து தருமாறு வேண்டப்பட்டதற்கு அமைய அதற்குரிய நிதி ஒதுக்கீடுகளை உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக வழங்குவதற்கு ஆளுநர் பணிபுரை வழங்கினார்.

எதிர்வரும் காலங்களில் மாதாந்தம் ஆளுநரின் சந்திப்பு புத்தளத்தில் இடம்பெறும் எனவும் மக்கள் குறைகள், பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்வதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்வதற்கும் தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் நகர அணியினர் தயாராக உள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.









# கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் சிறப்பாக நடைபெற்ற வயல் விழா

விவசாயிகள் மத்தியில் நவீன விவசாயத்தொழில்நுட்பங்களை வழங்கி விவசாய உற்பத்தி மூலம் விவசாயிகள் உச்ச பலனடையும் முகமாக விவசாய திணைக்களம் மேற்கொண்டு வரும் செயற்பாடுகளில் ஒன்றான வயல் விழா கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பரசூட் முறையில் பிஜி366 வெள்ளை இன நெல் நடுகை செய்யப்பட்ட வயல் அறுவடை விழா தர்மபுரம் விவசாய போதனாசிரியர் பிரிவின் தர்மபுரம் கிழக்கு பகுதியில் நடைபெற்றது.

தர்மபுரம் பகுதிக்குரிய விவசாய போதனாசிரியர் க.சரணியா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் வி.சோதிலட்சுமி கலந்து கொண்டார்.குறித்த நிகழ்வில் பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து குறித்த நாற்றுநடுகை மூலம் களை நோய்த்தாக்கத்திலிருந்து அதிக விளைச்சலை விவசாயிகள் பெற முடியும் எனத் தெரிவித்தார். 113







# கைகாட்டி சந்தி சிறுவர் பூங்கா மீளத் திறப்பு

(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை கைகாட்டி சந்தி சிறுவர் பூங்கா மீள நேற்று (வெள்ளிக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

கடந்த காலங்களில் இச்சிறுவர் பூங்கா அருகில் உள்ள கைகாட்டி குளத்தில் முதலைகள் நடமாடுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளமையை தொடர்ந்து சிறுவர்களின் பாதுகாப்பு நலனைக் கவனத்தில் கொண்டு சம்மாந்துறை பிரதேச சபையின் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது.

அரசாங்கத்தின் கிளீன் சிறி லங்கா வேலை திட்டத்தின் கீழ் கைகாட்டி சந்தி சிறுவர் பூங்கா மீளத் திறந்து சிறுவர்களின் பாவனைக்கு கையளிப்பதற்காக சிறுவர் பூங்கா வளாகத்தை சுத்தம் செய்யும் பணிகள் மற்றும் குளத்தை அன்றிய பிரதேசத்தில் முதலைகள் உட்செல்லாதவாறு வலைகள் பொருத்தும் வேலைத்திட்டம் சம்மாந்துறை பிரதேசசபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் தலைமையில் வியாழக்கிழமை பிரதேச சபையின் ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் இச் சிறுவர் பூங்கா வெள்ளிக்கிழமை முதல் பிற்பகல் 2.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை திறந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.








# வீதி சீரமைக்கப்படாமையால் மக்கள் அவதி

வவுனியா, போகஸ்வே வெள - மாமடு வீதி நீண்டகாலமாக புனரமைக்கபடாத நிலையில் காணப்படுவதால் அவ் வீதியை பயன்படுத்த முடியாத நிலையில் மக்கள் இடர்பாடுகளை எதிர் நோக்கியுள்ளனர்.

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட போகஸ்வே வெள கிராமமானது குடியேற்றக் கிராமமாகும். வவுனியாவில் இருந்து குறித்த கிராமத்திற்கு செல்கின்ற பிரதான வீதியில் மாமடு பகுதியில் இருந்து போகஸ்வே வெள வரையிலான சுமார் 15 கிலோ மீற்றர் நீளமான வீதியானது நீண்டகாலமாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இதனால் அவசர நோயாளர்களைக் கூட அம்புலன்ஸ் உடனடியாக வைத்தியசாலைக்கு கொணடு செல்ல முடியாத நிலை காணப்படுவதுடன், போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ்களும் சீராக போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலை காணப்பகின்றது.

இதனால் இக் கிராம மக்களும், அங்கு கடமை புரியும் உத்தியோகத்தர்களும் நகருக்கு போக்குவரத்து செய்ய முடியாது அவதிக்குள்ளாயுள்ளதுடன், குறித்த வீதியை புனரமைக்க அதிகாரிகளும், அரசாங்கமும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். 100



# முத்தேர் பவனியும் காவடியாட்டமும்

(கேதீஸ்)

தலவாக்கலை அருள்மிகு ஸ்ரீகதிரேசன் ஆலயத்தின் வருடார்ந்த தைப்பூச திருவிழாவின் 10 ஆம் நாள் சித்திரை முத்தேர் பவனியும் 12 ஆம் நாள் பால் குடம் பவனியும் காவடியாட்டமும் நடைபெற்றது.









காலைக்கதிர் Kalaikkathir

# பிரதேச செயலக மகளீர் அபிருத்தி நிலையத்தின் கண்டாவளை மனைப்பொருளியல் கண்காட்சி

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் கண்டாவளை பிரதேச செயலக மகளீர் அபிருத்தி நிலையத்தின் மனைப்பொருளியல் கண்காட்சி விசுவமடு மத்தி சனசமூக நிலையத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

மனைப்பொருளியல் பயிற்சி பெறுபவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

கண்டாவளை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.சுரேஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கண்டாவளை பிரதேச செயலகத்தின் கணக்காளர் பி.கார்த்திகா கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் நிர்வாக உத்தியோகத்தர் சி.சுமதி ,மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.உமாபாலன், பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் பிஅமலராசா, திருமதி பிசுரேகா, நிர்வாகஉத்தியோகத்தர் கண்டாவளை ச.சந்திரன், நிர்வாக கிராம அலுவலகர் கண்டாவளை க.சுசீந்திரன் ஆகியோரும் - கௌரவ விருந்தினர்களாக செ.அஜித்குமார் கிராம அலுவலர், புன்னைநீராவி கலந்து கொண்டனர்.





நிகழ்வில் மனைப்பொருளியல் பயிற்சி பெறுகின்றவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# டேஸ்ட் கடைகளின் மீது இரவுவில் தீடீர் சோதனை

(தில்சாத் பர்வீஸ்)

சுகாதாரமற்ற கிழக்கு பொரியல் உட்பட டேஸ்ட் கடைகள் தொடர்பில் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களையடுத்து உணவுப்பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய ஸஹீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத் தலைமையில் சென்ற சுகாதார குழுவினர் புதன்கிழமை இரவு திடீர்ச்சோதனைகளை நடத்தினர்.

கடந்த காலங்களில் சம்மாந்துறை பிரதேச உணவகங்கள் உட்பட டேஸ்ட் கிழங்கு பொரியல் கடைகளின் சுகாதார நடைமுறைகளைப் பேணி உணவுகளைத் தயாரிக்கு மாறும் உணவகங்கள் சுத்தமில்லாதிருத்தலும், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கின்மை, நீண்ட நாள்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளை தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருள்களின் தரம் போன்றவற்றை சுகாதார முறைப்படி பேணுமாறும் ஆலோசனை வழங்கியதுடன், அறிவித்தல்களைப் பேணி நடக்காத உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.



இதன் போது, மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற முறையில் களஞ்சியப்படுத்திய மற்றும் பழுதடைந்த உணவுகளை வைத்திருந்த ஒன்பது கடை உரிமையாளர்களுக்கு எதிராக சம்மாந்துறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதன்படி, ஒன்பது கடை உரிமையாளர்களுக்கும் எதிராக 25,000 ரூபா, 10,000 ரூபா, 5,000 ரூபா என மொத்தமாக ஒரு லட்சம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டதாக பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

இச் சோதனை நடவடிக்கையில், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.என்.எம். பைலான் தலைமையிலான குழுவினர் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.02.2025இல் வெளியிடப்பெற்றது